திரு. எம். சுரேந்திரன் : இந்தப் பஞ்சாலைகளிலே இயந்திரங்களை நவீனமாக்குவதற்கு ஆன திட்டத்திற்கு எவ்வளவு காலக்கெடு நிச்சயிக்கப்பட்டு இருக்கிறது ? எவ்வளவு தொழிற்சாலைகளை நவீனமாக்க வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ? அதற்கு ஒவ்வொரு வருஷமும் ஆகும் செலவு என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லா ஆலைகளும் நவீனப்படுத்தப்பட வேண்டுமென்பதுதான் நம்முடைய திட்டம். எல்லாவற்றிற்கும் எவ்வளவு வேண்டும் என்ற விவரம் என்னிடத்திலே இல்லை.

Sale of Controlled Cloth.

* 499 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state :—

(*a*) whether the Tamil Nadu Textile Corporation has proposed to open fair price shops for the sale of controlled cloth in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சில ஆலைகள் கூட்டாக 31—10—72-ல் பீளமேட்டில் ஒன்றும், 1973 ஜனவரியில் சிங்காநல்லூரில் ஒன்றும் ஆக இரண்டு நியாய விலைக் கடைகள் திறந்திருக்கின்றன.

திரு. என். டென்னிஸ் : மாநிலத்திலுள்ள வேறு இடங்களிலும் இது
முற்பகல் மாதிரி நியாய விலைக் கடைகள் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

9-30 மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆலைகள் கோவையில் இருக்கின்றன. அங்கே உற்பத்தி செய்யப்படுவதை விற்கின்ற நிலையங்கள் அங்கு திறக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய விற்பனை எப்படி நடைபெறுகிறது என்பதையொட்டி மேற்கொண்டு பரிசீலிக்கலாம்.

திரு ந. தருமலிங்கம் : நியாய விலைக் கடைகள் என்று போர்டு போட்டுக்கொண்டு தனியார் கடைகளில் அநியாய விலைக்கு விற்கப்படுவதாகச் சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : தனியார் கடைகளைப் பற்றி என்ன நிலை என்று தெரியாது. நாம் இப்போது ஆரம்பித்திருப்பது நம்முடைய தொழிற்சாலைகளில் உற்பத்தியானவற்றை அதிக லாப நோக்கு இல்லாமல் குறைந்த விலைத் துணிகள் ஏழைகளுக்கு வேண்டிய அளவுக்குக் குறைந்த விலையில் கொடுக்க வேண்டுமென்பதுதான் திட்டம்.

1973 மார்ச் 24]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இங்கு இருக்கக்கூடிய சிறப்பு அங்காடி மூலமாக இந்த மாதிரி கட்டுப்படுத்தப்பட்ட துணிகளை விநியோகம் செய்ய அரசு ஏதேனும் ஆலோசனை கூறுமா? நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எல்லா ஆலைகளைப் பொறுத்தவரை மத்திய அரசு செய்ய வேண்டும். நம்முடைய ஆலைகளைப் பொறுத்தவரை நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். மத்திய அரசாங்கம் இது பற்றி ஒரு திட்டம் கொண்டு வந்தது. ஆனால் திட்டத்தின் அடிப்படையில் எந்தத் துணியைத் தருவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்களோ அந்தத் துணி நம்முடைய தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையில்லாமல் இருப்பதைப் பார்த்தோம். அதை விடக் குறைவாக நம்முடைய கைத்தறித் துணி இருக்கிறது. எந்தெந்தத் துணி குறைந்த விலையில் தேவையோ அதை எல்லாம் கொடுக்கத் தமிழக அரசு ஒப்புதல் கொடுத்திருக்கிறது.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: இந்த இரண்டு நியாய விலைக் கடைகளிலும் கண்ட்ரோல் கிளாத் சரியாக விற்பனையாகிறதா அல்லது தேங்கிப் போகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதுதான் புதிய முயற்சி. இதிலே ஒரு கடையிலே 11,229 மீட்டர் துணி 34,430 ரூபாய் மதிப்புக்கு விற்கப்பட்டிருக்கிறது. அதைப்போல் இன்னொரு கடையில் 7,165 மீட்டர் துணி 20,068 ரூபாய் மதிப்புற்கு விற்கப்பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி: இந்த நியாய விலைக் கடைகளை ஊக்குவிக்கக் கூடிய வகையில் ரெடிமேட் துணிகளும் விற்க முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ.மாதவன்: ரெடிமேட் துணிகள் விற்க ஏராளமான கடைகள் இருக்கின்றன. இந்தக் கடைகளைப் பொறுத்த வரை நம்முடைய ஆலைகளில் உற்பத்தி ஆகக்கூடிய துணிகளை வெளியார் அதிக லாபத்தைப்பயன் படுத்தாமல் இருக்க நாமே கடைகளைத்திறந்து விற்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: இந்தத் துணிகள் இரண்டு இடங்களில் விற்கப்படுகின்றன. இங்கே குறைந்த விலைத் துணி ஒரு மீட்டர் என்ன விலை? இந்தத் துணியை யார் கேட்டாலும் விநியோகிக்கப்படுகிறதா? அல்லது சீனி கார்டு மாதிரிக் கொடுத்து விற்பனை செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒவ்வொரு துணிக்கும் என்ன விலை என்ற விபரம் இல்லை. எல்லோருக்கும் குறைந்த விலையில் துணி கிடைக்க வேண்டுமென்றுதான் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். அவர்கள் சொன்னதுபோல் அதிகக் கிராக்கி ஏற்படுமானால் அப்படிப்பட்ட முறைகளைப் பரிசீலிக்கலாம்.

திரு கே.எ. வகாப் : நம்முடைய ஆலைகளில் உற்பத்தியாகும் துணி ரகங்கள் என்னென்ன ? மக்கள் விரும்பி வாங்கக்கூடிய அளவுக்கு இருக்கின்றனவா ? இல்லையென்றால், அதைப்பற்றி விளம்பரங்கள் செய்து விற்பனையை ஊக்குவிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது இங்கு நடக்கின்ற நிகழ்ச்சியே ஒரு விளம்பரமாக இருக்கும் என்று நம்புகிறேன். இந்தத் துணியைப் பொறுத்த வரை இப்போதே வாங்குகின்ற வாய்ப்பு இருக்கிறது. அதிக டிமாண்ட் வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். அப்படி ஏற்படும் நேரத்தில் மேற்கொண்டு விரிவாக விற்பனை செய்யும் முயற்சிகள் பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. என். டென்னிஸ் : இதில் மார்ஜின் ஆப் பிராபிட் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வியாபார ரகசியங்களை எல்லாம் இங்கே கேட்கிறார்கள். நான் சொல்லுவதெல்லாம் அதிக லாபம் இல்லாத அளவுக்கு இரண்டு மூன்று கை மாறி வியாபாரிகளுடைய எக்ஸ்ப்ளாய் டேஷன் இல்லாத அளவுக்கு விற்க வேண்டுமென்பதுதான் கொள்கை. நம்முடைய மில்களில் உற்பத்தியாகும் துணிகளுக்கு அதிக லாபம் வைக்காது விற்கப்படும் என்பதற்கு உறுதி அளிக்கிறேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து : என்ன வகையான துணிகள் தயாரிக்கப் படுகின்றன. எந்த அளவுக்குத் தயாரிக்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : துணிகள் பற்றிய விவரம் என்னிடம் இல்லை என்று ஏற்கெனவே சொன்னேன்.

டாக்ஸி டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

*500 வினா.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) டாக்சி டிரைவர்கள் தொழிலியல் கூட்டுறவுசங்கங்கள் எங்கெங்கு அமைக்கப்பட்டுள்ளன ?

(இ) அவைகளின் மூலம் டிரைவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட கார்கள் எத்தனை.

மாண்புமிகு திரு. செ.மாதவன் : (அ—இ) விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ (104–105-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.)